## 29.17 மக்கள் நலப்பணியாளர்களின் பொறுப்புகள் விரிவு படுத்துதல்

கடிதம் (பல்வகை) எண்.250, நாள் 24.11.1998

அனுப்புநர்

டாக்டர். இரேமஷ் சந்திர பண்டா, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்
ஊரக வளர்ச்சி துறை,
சென்னை – 9.

பெறுநர்

ஊரக வளர்ச்சி இயக்குநர். சென்னை –15,
அனைத்து மாவட்டாட்சியர்கள் (சென்னை நீங்கலாக).

அய்யா,

பொருள் பணியமைப்பு – ஊரக வளர்ச்சித் துறை – ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய திட்டப்பணிகளை செயல்படுத்த களப்பணியாளர்கள் நியமனம் – மக்கள் நலப் பணியாளர்களின் பொறுப்புகள் விரிவுபடுத்துதல் – அறிவுரை வழங்கப்படுகிறது.

பார்வை 1. அரசாணை நிலை எண்.50, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 24.02.1997
2. அரசு கடிதம் எண்.10030/மதி1/1997, நாள் 22.08.1997.
3.அரசாணை நிலை எண்.249, ஊரக வளர்ச்சி, நாள் 24.11.1998.

ஊராட்சி அமைப்புகள் சுதந்திரமாக செயல்பட அதன்மீது தேவையற்ற நிர்வாக கட்டுப்பாடுகளை படிப்படியாக தளர்வு செய்யப்படும் நிலையில், ஊர்நல அலுவலர்களை ஊராட்சிகளின் பணிகளை மேற்பார்வை செய்ய அனுமதிப்பது பொருத்தமாக இருக்காது என அரசு முடிவெடுத்துள்ளது. அடிப்படை வசதிகள் பற்றிய மேற்பார்வைகளுக்கு மக்கள் நலப்பணியாளர்கள் நியமிக்கப்பட்டதால், அவர்கள் பணிகளை சீர்படுத்தி செம்மையாக்கினால், அவர்களே ஊராட்சிக்கும் ஒன்றிய அளவிலான வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சி) அவர்களுக்கும் ஒரு தகவல் தொடர்பாளராக இருக்க வாய்ப்பு உள்ளது என அரசு முடிவெடுத்துள்ளது. எனவே தற்போது மேற்கொண்டிருக்கும் பணிகளையும் சேர்ந்து, மக்கள் நலப் பணியாளர், ஊராட்சிக்கும் ஒன்றிய அளவிலான வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சி) அவர்களுக்கும் ஒரு தகவல் தொடர்பாளராக செயல்பட வேண்டும் என அரசு ஆணையிடுகின்றது. மாவட்டாட்சியர் இந்த ஆணையை செயல்படுத்துவதை கண்காணிக்க வேண்டுமெனவும் அரசு ஆணையிடுகின்றது.

அரசு செயலாளருக்காக